**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP . No.26/2025</u>**

**<u>நாள் : 10.04.2026</u>**

**எ.ம.சா.** 2 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சிவக்குமார் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.மணி | வயது | : | 42 |
| ஊர் | : | தாமலேரிமுத்தூர் | தொழில் | : | டிரைவர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் 1 ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். TN 83 MB 4928 என்ற மகேந்திரா பிக்கப் வாகனமானது எனக்கு சொந்தமானதாகும். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை நான் ஓட்டிச் சென்றேன். விபத்து 01.04.2023ஆம் தேதி நடந்தது. அன்றையதினம் காலை 11 மணிக்கு தாமலேரிமுத்தூரிலிருந்து கனகநாச்சியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் பல்லூர் என்ற இடத்தில் விபத்து நடந்தது. மேற்படி வாகனத்தில் எனது உறவினர் வெங்கட்ராமனின் ஈமக்காரியத்திற்கு சென்றோம். மேற்படி வாகனத்தில் சமையல் செய்பவர்கள் 3 பேர் பயணித்தார்கள். நான் மேற்படி சாலையில் சென்றுகொண்டிருந்தபோது ஆட்கள் குறுக்காக வந்ததால் திடீரென வந்ததால் பிரேக் போட்டபோது ரஜினி என்பவர் பிக்கப் வாகனத்திலிருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. ரஜினிக்கு மட்டும்தான் காயம் ஏற்பட்டது. மற்ற நபர்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. நான் வாகனத்தை மீடியமாகத்தான் ஓட்டிச்

சென்றேன். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. புகாரில் சமையல் சாமான்கள் எடுத்து சென்றதாக சொல்லப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. எனது வாகனம் சரக்கு வாகனமாகும். சரக்கு வாகனத்தில் முன்பக்கத்தில்தான் அமர்ந்து பயணிக்கவேண்டும் என்ற சட்டவிதிமுறைகள் எனக்கு தெரியும். விபத்து எனது அஜாக்கிரதையால் ஏற்படவில்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

மனுதாரர் எனது ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி ரஜினி ஆட்டோ ஓட்டும் வேலையும், சமையல் வேலையும் செய்து வருகிறார் என்றால் சரிதான். விபத்து சமையத்தில் மனுதாரர் சமையல் செய்வதற்கான பாத்திரங்களை ஏற்றிக்கொண்டு எனது வாகனத்தில் பயணித்தார் என்றால் சரிதான். மேற்படி சமையல் பாத்திரங்கள் மனுதாரருக்கு சொந்தமானவை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனக்கெதிராக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் விசாரணைக்கு பின்னிட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். நான்தான் எனக்கு சொந்தமான பொலிரோ பிக்கப் வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச் சென்றதால்தான் மனுதாரர் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.